(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 14 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2008, ஓகத்து 05, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0038/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு செயற்பாடுகளுக்கென 2002 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதி முதல் 2007 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதி வரை, "செஸ்" வரி மூலமாக சேகரிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்,

(ii) குறிப்பிட்ட செயற்பாட்டையும் அதற்கான தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) உல்லாசப்பயணம், கடற்றொழில், தெங்கு, தேயிலை, இறப்பர், இறால் ஆகிய துறைகள் மூலமாக சேகரிக்கப்பட்ட 'செஸ்' வரியின் நூற்றுவீதம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 'செஸ்' வரி மூலமாக சேகரிக்கப்பட்ட பணம் ஒவ்வொரு துறைசார்ந்த அமைச்சிற் கும் அனுப்பப்பட்ட திகதிகளையும்,

(ii) கடந்த 5 வருடங்களாக இவ்வாறு அனுப்பப்பட்ட பணம் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0039/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரண்டாவது சர்வதேச விமான நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள், செலவு நலன் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை ஆகியன அங்கீகா ரத்தின் பின்பு சமர்ப்பிக்கப்பட்டனவா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேற்கூறிய மூன்று அறிக்கைகளையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) வேறு இடங்களில் மீள் குடியமர்த்தப்படவுள்ள மக்களுக்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையினையும்,

(ii) மக்களின் மொத்த எண்ணிக்கையினையும் கொடுக்கப்படவுள்ள தொகை யுடன் அனைத்துப் பெயர்கள் உள்ளடக்கிய பட்டியலையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) அத்திவாரக் கல் நாட்டப்பட்ட திகதியினையும் பூர்த்தி செய்யப்படவுள்ள திகதியினையும்,

(ii) இந்த விமான நிலையத்தினைப் பயன்படுத்த இணங்கியுள்ள விமான சேவைகளின் பெயர்களையும்,

(iii) அதனை சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் (IATA) ஏற்று அங்கீகரித் துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) (i) இந்த விமான நிலையம் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருக்குமா என்பதையும்,

(ii) செலவழிக்கப்படவுள்ள தொகையினையும் யார் அதற்கு நிதி வழங்கப் போகின்றார்கள் என்பதையும்,

(iii) கடன் வழங்குவதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0040/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2007ஆம் ஆண்டு சனவரி 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மேதகு சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், மேதகு சனாதிபதியின் ஆலோசகர்கள் மற்றும் அமைச்சர்கள் என்போரால் பயன்படுத்தப்பட்ட உலங்கு வானூர்திகளின் நிமித்தம் அரசாங்கத்திற்கேற்பட்ட மொத்தச் செலவினை வெவ்வெறாகவும்,

(ii) மேதகு சனாதிபதியிய் ஆலோசகர்கள் மற்றும் அமைச்சர்களின் ஆலோச கர்கள் என்போருக்காக ஏற்பட்ட செலவுகளின் விரிவான கூறுகளையும்

அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கத்திடம் கோரும் கட்டணச் சிட்டையேதுமின்றி விமானப்படையின் உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்டனவா என்பதையும்,

(ii) மேதகு சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் என்போரின் பயன்பாடு நீங்கலாக உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்ட தடவைகள் மற்றும் பயன்படுத்திய நபர்கள் என்பனவற்றின் எண்ணிக்கையையும்,

(iii) மேற்படி நபர்களுக்காகத் தனியார் கம்பனிகளின் உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், ஏற்பட்ட செலவையும் செலவை உண்டுபண்ணிய நபரின் பெயரையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0131/ '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி, — மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையில் பணிபுரிந்து ஓய்வுபெறும் ஒருவருக்கு ஓய்வூதியம் உரித்தாவதற்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 240 மாதங்களின் தொடர்ச்சியான பங்களிப்புக்களைச் செய்திருக்க வேண்டுமென்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபையின் சேவைக்கு 40 - 45 வயதெல்லையில் உள்ளவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்,

(iii) இவர்களுக்கு 240 மாத சேவைக்காலத்தை நிறைவு செய்ய முடியாதென்பதையும்,

(iv) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு சம்பளத்தினால் பங்களிப்புச் செய்தாலும் மேற் குறிப்பிட்ட காரணத்தினால் ஓய்வூதியம் கிடைக்காமல் துன்புற்றிருக்கின்ற 50 பேருக்குக் குறைவான தொகையினர்கள் உள்ளனரென்பதையும்,

(v) அவர்களது ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இற்றைவரை அது நிறைவேற்றப் படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 60 வயதில் ஓய்வு பெற்று ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த காலத்தையும் சேர்த்ததன் பின்பு ஓய்வூதியத்துக்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் 6 பேர் உள்ளனர் என்பதையும்,

(ii) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யாத ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்தைச் சேர்த்து ஒருவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) 45 வயதுக்குக் குறைந்த காலத்தைக் கவனத்திற் கொண்டு, சேவையை முழுமைப் படுத்த வேண்டிய விசேட பதவிகளுக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0132/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மீள்குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இல. 107/ ஏ2, வீர உதித்த மாவத்தை, ஹெடிகம, பிலியந்தல எனும் முகவரியில் வதியும் திரு. எச். ஜீ. சந்திரதாச மாத்தறை பஸ்கொட பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசித்து வந்தார் என்பதையும்,

(ii) 2003 ஆம் ஆண்டு வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக இவரின் வீடு அழிந்தது என்பதையும்,

(iii) இது தொடர்பாக பஸ்கொட பிரதேச செயலாளர் 15,000/= ரூபா வழங்கியுள்ளார் என்பதையும்,

(iv) 85,000/= ரூபா நிலுவைத்தொகை இவருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிலுவைத்தொகை வழங்கப்பட வேண்டுமென மாத்தறை மாவட்டச் செயலாளரினால் கெஸ்பாவை பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென் பதையும்,

(iii) பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக திரு. சந்திரதாச பல சந்தர்ப்பங்களில் முன்வந்திருந்தாலும் தீர்வு கிடைக்கப்பெறவில்லையென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி நிலுவைத் தொகையைப் பெற்றுக்கொடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0133/ '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிப்புணஆரச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக 2400 கி. மீ. மாகாண வீதிகளை அபிவிருத்தி செய்ய அவசியமான சாத்தியக்கூற்றறிக்கையும், விபரமான பொறியியற்றிட்டமும் தயாரிக்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அவ்வீதிகள் யாவை,

(ii) அந்த ஒவ்வொரு வீதிக்காகவும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா,

(iii) பணத்தைனி ஒதுக்கீடு செய்வதில் சம்பந்தப்பட்ட அமைச்சு எவ்வாறு தலையிடுகின்றது,

(iv) வீதிகளை அகலமாக்கல் இடம்பெறுமாயின் காணிகளை சுவீகரித்துக் கொள்ள பணம் பிரயோகிக்கப்படுமா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0365/ '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அகலவத்தைப் பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள கெகுலந்தல வடக்குப் பிரிவில் சமுர்த்தி உதவி பெறுவோர் யாவர் என்பதையும்,

(ii) இவர்களில் 2005 - 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் கிணறுகளுக்கான உதவி மற்றும் மலசலகூட உதவி பெற்றுக்கொண்டோர் யாவர் என்பதையும், பெயர் மற்றும் விபரங்களுடன்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0366/ '08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் 2 வது வகுப்பின் II ஆந் தரத்தைச் சேர்ந்த கணக்காய்வு அதிகாரிகளை சேர்த்துக் கொள்ளும் பொருட்டு 2002 ஆம் ஆண்டில் திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டதென்பதையும்,

(ii) இப் போட்டிப் பரீட்சையில் மன்னப்பிட்டிய, மாதுருஓயா சந்தி எனும் முகவரியில் வசிக்கும் திரு. விராஜ் கஹகல்ல சித்தியடைந்தாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 4 பேருக்கு மாத்திரம் 2007 ஆம் ஆண்டில் நியமனங்களை வழங்கி எஞ்சியுள்ள 15 வெற்றிடங்களுக்காக மீண்டும் போட்டிப் பரீட்சையை நடத்தியமைக்கான காரணம் யாதென் பதையும்,

(ii) சகலவிதமான தகைமைகளையும் பூர்த்தி செய்து போட்டிப் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ள திரு. விராஜ் கஹகல்லவுக்கு சம்பந்தப்பட்ட நியமனம் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) திரு. விராஜ் கஹகல்லவுக்கு மேற்படி நியமனத்தை வழங்க அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0371/ '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பலந்தோட்டை, பஹல பெரகம, நிந்தகம் பிரதேசத்தில் காணிகள் இழந்தோர் சங்கத்தினால் வலவ இடதுகரை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காணிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களுக்குக் காணிகளை வழங்க அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போதென்பதையும்,

(iii) காணிகள் வழங்கப்பட மாட்டாதெனில், அதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0405/ '08

10.

கௌரவ அசல ஜாகொடகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0406/ '08

11.

கௌரவ அசல ஜாகொடகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் துறைமுகங்கள் விமானச்சேவைகள் அமைச்சுக்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0407/ '08

12.

கௌரவ அசல ஜாகொடகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0526/ '08

13.

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு மாவட்ட அடிப்படையில் எவ்வளவு,

(ii) குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட அரிசி மற்றும் நெல்லாக சந்தைக்கு விநியோகிக்ப்பட்ட அளவு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வரிசி மற்றும் நெல் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட திகதி யாது,

(iv) அது எந்தெந்த விலைகளின் அடிப்படையில்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசியை கொள்வனவு செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்கள், கொள்வனவு செய்த தொகையுடன் யாவை,

(ii) வழங்கப்பட்ட விலைகளும் அவற்றுக்கான திகதிகளும் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0528/ '08

14.

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 2005 / 06 பெரும்போகம், 2006 சிறுபோகம், மற்றும் 2006/2007 பெரும்போகத்துக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட உர வகைகள் மற்றும் அளவுகள் வெவ்வேறாக யாவையென இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலநறுவை மாவட்டத்துக்கு அரசுக்குச் சொந்தமான லங்கா உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் சார்பில் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் யாவர் என்பதையும்,

(ii) குறிக்கப்பட்ட ஒவ்வொரு போகத்திலும் அரசின் 02 உர நிறுவனங்களி னாலும் இப்பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட உர வகைகளையும் அளவு களையும் வெவ்வேறாகவும்,

(iii) இப்பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட உரங்கள் விவசாயிகளுக்கு எந்நிறுவனங்களினால் வழங்கப்படும் என்பதையும்,

(iv) இப்பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் அனைத்து உரங்களும் உரிய கமநல சேவை நிலையங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறின்றேல், உரம் வழங்கப்பட்ட அப்பிரதிநிதிகள் யாவர்,

(vi) அவற்றின் அளவையும், விநியோகிக்காமைக்கான காரணத்தையும்,

(vii) இவ்வாறு உரம் வழங்காத நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக எவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0530/ '08

15.

கௌரவ அநுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எந்த ஆண்டில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டது,

(ii) தனியார் மயமாக்குகின்றபோது பின்பற்றப்பட்ட நடைமுறை யாது,

(iii) கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருந்தால் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் விலைவிபரங்கள் யாவை,

(iv) சம்பந்தப்பட்ட கம்பனிகள், என்ன அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) தனியார் மயப்படுத்துகின்றபோது கம்பனி பங்குகளில் அரசாங்கத்துக்கும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒப்படைக்கப்பட்ட பங்குகளின் அளவும் வீதமும் யாவை என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா,

(இ) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்ட ஆண்டிலிருந்து இற்றைவரை ஒவ்வொரு வருடமும் அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள பங்கிலாபம் எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகம்,— தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகத்தினைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; புடைவை மற்றும் ஆடைத்தொழிலின் அபிவிருத்திக்கும் நிலைபெறுதகு நன்மைக்கும் ஏற்பாடு செய்வதற்கும்; உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்காக புடைவை மற்றும் உடுதுணித் தொழில்நுட்பம், முகாமை மற்றும் அதனோடு தொடர்பு பட்ட துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயலமர்வுகளையும் நடாத்துவதற்கும்; வெளிநாடுகளுக்கான தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைச்

சேவைகளை ஏற்பாடு செய்வதற்கும்; 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகச்சட்டம் மற்றும் 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையச் சட்டத்தினை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.00 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 3.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

3.

கௌரவ (வண.) கொடபொல அமரகித்தி தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"லஸந்த அலகியவன்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— காட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (451 ஆம் அத்தியாயமான) காட்டுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 மே மாதம் 09 ஆம் திகதிய 1548/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக்

குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | ரூபா |
|---|---|---|
| தலைப்பு 142 — | கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*5.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 118, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து நூற்றி எண்பத்தி ஐந்து கோடியே நாற்பது இலட்சம் (ரூபா 1185,40,00,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | ரூபா |
|---|---|---|
| தலைப்பு 118 | — கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — கமத்தொழில் அபிவிருத்தி | |
| | மீண்டுவரும் செலவினம் | 1185,40,00,000 |
| | மொத்தம் | 1185,40,00,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 4 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,216,180,332.

*6.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.— இரண்டாம் மதிப்பீடு

*8.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால்

ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*21.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534 /18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக்

குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்ட றிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*33.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

34.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.